**RAJASTHAN PATRIKA**

**Dated: 28.11.2022 - Page: 02**

पत्रिका

Chennai, 28/11/2022, Page 02

# भारतीय संविधान की विशेषताओं और कार्यप्रणाली के बारे में बताया

**पत्रिका न्यूज नेटवर्क**
patrika.com

**पुदुचेरी.** स्कूल ऑफ लॉ, पांडिचेरी विश्वविद्यालय ने पांडिचेरी विश्वविद्यालय के कार्यकारी परिषद हॉल में संविधान दिवस समारोह का आयोजन किया। प्रोफेसर विक्टर आनंदकुमार डीन (प्रभारी), स्कूल ऑफ लॉ, पांडिचेरी विश्वविद्यालय ने औपचारिक रूप से सभा का स्वागत किया। कुलपति, प्रो. गुरमीत सिंह ने संविधान की प्रस्तावना पढ़ने में दर्शकों का नेतृत्व किया और अध्यक्षीय भाषण दिया। उन्होंने बताया कि कैसे संविधान समय की कसौटी पर खरा उतरा है। प्रो. सिंह ने भारत के संविधान को बनाए रखने की आवश्यकता पर जोर दिया और नागरिकों के रूप में, लोगों को हमारे संविधान की पवित्रता को बनाए रखने और उसकी रक्षा करने के लिए एक जिम्मेदार व्यवहार प्रदर्शित करना चाहिए।

मुख्य अतिथि मद्रास उच्च न्यायालय के न्यायाधीश सी. सरवनन ने वर्तमान पीढ़ी के लिए संवैधानिक मूल्यों पर संविधान दिवस भाषण दिया। जिसमें उन्होंने भारतीय संविधान की विशेषताओं, विशिष्टता और कार्यप्रणाली के बारे में विस्तार से बताया। उन्होंने मौलिक अधिकारों और राज्य के नीति निर्देशक सिद्धांतों के महत्व और सुशासन के लिए मार्गदर्शक सिद्धांतों के रूप में संविधान की भूमिका पर बात की। उन्होंने आगे कहा हमें संविधान की रक्षा करनी चाहिए क्योंकि यह हमारी रक्षा करता है।




*पांडिचेरी विश्वविद्यालय के कार्यकारी परिषद हॉल में संविधान दिवस समारोह का आयोजन किया गया।*

इस अवसर पर विभिन्न प्रतियोगिताओं का आयोजन किया गया और विजेताओं को पुरस्कार वितरित किए गए। स्कूल ने प्रस्तावना के ऑनलाइन पढ़ने को भी बढ़ावा दिया था जिसे 22 अलग-अलग भाषाओं में उपलब्ध कराया गया था और यूजीसी, शिक्षा मंत्रालय भारत सरकार द्वारा अनिवार्य रूप से विश्वविद्यालय के छात्रों और कर्मचारियों के बीच संविधान पर ऑनलाइन प्रश्नोत्तरी भी आयोजित की गई थी। संविधान की प्रस्तावना के पाठ पर पोस्टर विश्वविद्यालय के सभी विभागों और प्रशासन के विभिन्न वर्गों में परिचालित, वितरित और चिपकाए गए थे। डॉ जी शुभलक्ष्मी ने औपचारिक धन्यवाद प्रस्ताव दिया। कार्यक्रम का समन्वयन डॉ. श्यामतनु पाल द्वारा किया गया।

DINAMALAR

28 NOV 2022

PAGE 1

# புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் அரசியல் அமைப்பு தின விழா

**புதுச்சேரி, நவ. 28–**

புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் அரசியலமைப்பு தின விழா கொண்டாடப்பட்டது.

சட்டப் பள்ளி பேராசிரியர் விக்டர் ஆனந்த்குமார் வரவேற்றார். துணை வேந்தர் குர்மீத் சிங் தலைமை தாங்கி, பேசுகையில், 'குடிமக்கள் என்ற முறையில், நமது அரசியலமைப்பின் புனிதத்தைப் பாதுகாப்பதிலும் மக்கள் பொறுப்பான நடத்தையை வெளிப்படுத்த வேண்டும்' என்றார்.




புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் நடந்த அரசியலமைப்பு தின விழாவை, சென்னை ஐகோர்ட் நீதிபதி சரவணன் துவக்கி வைத்தார். அருகில் துணை வேந்தர் குர்மீத் சிங்.

தொடர்ந்து அரசியலமைப்பின் முன்னுரை வாசிக்கப்பட்டது. சென்னை ஐகோர்ட் நீதிபதி சரவணன், துவக்கி வைத்து பேசுகையில், 'அரசியலமைப்புச் சட்டம், நம்மைப் பாதுகாப்பதால் அதை நாம் பாதுகாக்க வேண்டும்' என்றார்.

விழாவில் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. 22 வெவ்வேறு மொழிகளில் கிடைக்கப் பெற்ற முகவுரைன் வாசிக்கப்பட்டது.

அரசியலமைப்பின் முன்னுரை சுவரொட்டிகள் விநியோகிக்கப்பட்டு பல்கலைக்கழகத்தின் அனைத்து துறைகள் மற்றும் நிர்வாகத்தின் பல பிரிவுகளிலும் ஒட்டப்பட்டது.

நிகழ்ச்சியில் புதுச்சேரி நீதிமன்ற நீதிபதிகள், ஆராய்ச்சி அறிஞர்கள், புதுச்சேரி பல்கலைக் கழகத்தின் பேராசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள், கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியை சுபலட்சுமி, ஷியாம்தானு பால் ஒருங்கிணைத்தனர்.

DINAKARAN
28 NOV 2022
PAGE 14



# புதுவை பல்கலைக்கழகத்தில் அரசியலமைப்பு தினவிழா



புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் அரசியலமைப்பு தினவிழா நடந்தது.

புதுச்சேரி, நவ. 28: புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் அரசியலமைப்பு தினவிழா நடந்தது. சட்டப்பள்ளி பேராசிரியர் விக்டர் ஆனந்த்குமார் வரவேற்றார். துணைவேந்தர் குர்மீத் சிங் தலைமை தாங்கி அரசியலமைப்பு எவ்வாறு காலத்தின் சோதனைகளை தாண்டி நின்றிருக்கிறது என்பதனையும், அரசியலமைப்பின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் மற்றும் அரசியலமைப்பின் முன்னுரையை படித்தலின் நோக்கத்தையும் எடுத்துரைத்தார். இந்திய அரசியலமைப்பை நிலைநிறுத்தவேண்டியதன் அவசியத்தையும், குடிமக்கள் என்ற முறையில், அரசியலமைப்பின் புனிதத்தை பாதுகாப்பதிலும் மக்கள் பொறுப்பான நடத்தையை வெளிப்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார். தொடர்ந்து, அரசியலமைப்பின் முன்னுரை வாசிக்கப்பட்டது. சிறப்பு விருந்தினராக சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி சரவணன் கலந்துகொண்டு இன்றைய தலைமுறைக்கான அரசியலமைப்பின் மதிப்புகள் என்ற தலைப்பில் அரசியலமைப்பு குறித்து உரையாற்றினார். அப்போது, அடிப்படை உரிமைகள் மற்றும் மாநில கொள்கையின் வழிகாட்டு கோட்பாடுகள் மற்றும் நல்லாட்சிக்கான வழிகாட்டு கொள்கைகளாக அரசியலமைப்பின் பங்கு ஆகியவற்றின் முக்கியத்துவம் பற்றி பேசினார்.

இவ்விழாவை முன்னிட்டு சட்டப்பள்ளி சார்பில் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. அரசியலமைப்பின் முன்னுரை சுவரொட்டிகள் விநியோகிக்கப்பட்டு பல்கலைக்கழகத்தின் அனைத்து துறைகள் மற்றும் நிர்வாகத்தின் பல்வேறு பிரிவுகளிலும் ஒட்டப்பட்டது.

இதில் நீதிபதிகள், ஆராய்ச்சி அறிஞர்கள், பேராசியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியை சட்டப்பள்ளியை சேர்ந்த டாக்டர் சுபலட்சுமி, டாக்டர் ஷியாம்தானு பால் ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

DINAMALAR

28 NOV 2022

PAGE 3

# பல்கலைக்கழகத்தில் பி.எச்.டி., சேர 30ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம்

**புதுச்சேரி, நவ. 28–**
புதுச்சேரி பல்கலைக்கழக பி.எச்.டி., படிப்பில் சேர பட்டதாரிகள் ஆன்–லைனில் விண்ணப்பிக்க வரும் 30ம் தேதி வரை காலக்கெடு நீட்டிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் முதுநிலை படிப்புகளை தொடர்ந்து பி.எச்.டி., படிப்பிற்கு விண்ணப்பம் கடந்த 25ம் தேதி வரை வரவேற்கப்பட்டது.

இந்த விண்ணப்பம் வரவேற்பு வரும் 30ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

எனவே, யூ.ஜி.சி., நெட், ஜூனியர் ரீசர்ஜ் பெலோஷிப் (ஜே.ஆர். எப்), இதர பிற்படுத்தப்பட்டோருக்கான நேஷனல் பெலோஷிப் (என்.எப்.ஓ.பி.சி), எஸ்.சி., மாணவர்களுக்கான நேஷனல் பெலோஷிப் (என்.எப்.எஸ்.சி), சிறுபான்மையினருக்கான மவுலானா ஆசாத் தேசிய பெலோஷிப் (எம்.ஏ.என்.எப்), இந்திய விஞ்ஞான் தொழிற்சாலைகள் ஆராய்ச்சி கவுன்சில் (சி.எஸ்.ஐ.ஆர்) தேர்ச்சி பெற்ற பட்டதாரி மாணவர்கள் நுழைவு தேர்வு இல்லாமல் நேரடியாக புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் பி.எச்.டி., படிப்பில் சேர ஆன்–லைனில் வரும் 30ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம். www.pondiuni.edu.in/admissions-2022–23 என்ற இணையதளத்தில் தகவல் குறிப்பேடு கிடைக்கும்.

புதுச்சேரி பல்கலைக் கழத்தில் பல்வேறு படிப்புகளில் 947 பி.எச்.டி., இடங்கள் உள்ளது குறிப்பிடத்தக்கது.

இத்தகவலை புதுச்சேரி பல்கலைக்கழக மக்கள் தொடர்பு அதிகாரி மகேஷ் தெரிவித்துள்ளார்.

MAALAI MALAR

28 NOV 2022

PAGE 2

புதுவை பல்கலைக்கழகத்தில்

# பி.எச்.டி. சேர காலக்கெடு நீட்டிப்பு

புதுச்சேரி, நவ.28— புதுவை பல்கலைக்கழகத்தில் முதுநிலை படிப்புகளை தொடர்ந்து பி.எச்.டி. படிப்பிற்கு கடந்த 25—ந் தேதி வரை விண்ணப்பம் பெறப்பட்டது.

இந்த விண்ணப்பம் வருகிற 30—ந் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. பட்டதாரி மாணவர்கள் நுழைவு தேர்வு இல்லாமல் புதுவை பல்கலைக்கழகத்தில் நேரடியாக பி.எச்.டி. படிப்பில் சேர ஆன்லைனில் வருகிற 30—ந் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம். புதுவை பல்கலைக்கழகத்தில் பல்வேறு படிப்புகளில் 947 இடங்கள் உள்ளது.

இந்த தகவலை பல்கலைக்கழக மக்கள் தொடர்பு அதிகாரி மகேஷ் தெரிவித்துள்ளார்.